983

18 OCT 2024

திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
பிறப்பிப்பவர். திரு. இரா. சௌந்தரராஜன், எம்.எஸ்ஸி,பி.எட்., எம்.பில்

ந.க.எண்.011013/அ1/2022 நாள் 14.10.2024

பொருள் பள்ளிக்கல்வி - தமிழ்நாடு - அமைச்சுப்பணி - கருணை அடிப்படை நியமனம் - திருவாரூர் மாவட்டம் - புதுத்தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.அமுருகையன் என்பவர் 02.09.2015 இல் இறப்பு - வாரிசு தாரரான மகன் திரு.மு.மணி என்பாருக்கு - கருணை அடிப்படையில் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

18/10/2024

பார்வை
1. அரசாணைநிலை எண்–18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (Q1) 23.01.2020.
2. சம்மந்தப்பட்டவரின் கருத்துரு.
3. அரசாணைநிலை எண்.151 பள்ளிக்கல்விSE(1) துறை நாள்.09.09.2022.
4. திருவாரூர் முதன்மைக்கல்விஅலுவலரின் செயல்முறைகள்கடித ந.க.எண்.009811/அ2/2022 நாள்.12.10.2022.
5. திருவாரூர் முதன்மைக்கல்விஅலுவலரின் கடிதம் ந.க.எண்.011013/அ1/2022 நாள். 16.06.2023.
6. அரசு கடித.efileஎண்.4419/தொ.க. (1)/2024–1. நாள்.17.05.2024.
7. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்சென்னை–06, ந.க.எண்.026062/ஜே/((N)/E2) 2023 நாள்.22.05
8. சென்னை 06, தமிழ்நாடுபள்ளிக்கல்விஇணைஇயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்கடித ந.க.எண்.079047/ஜே/ E2/2023 நாள்.22.07.2024.

....................

திருவாரூர் மாவட்டம், புதுத்தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக பணிபுரிந்த திரு.அமுருகையன் என்பார் பணியில் இருக்கும் 02.09.2015 அன்று காலமானார். அவரது மகன் திரு.மு.மணி என்பார் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி 30.10.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.மு.மணி என்பவர் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 2011 இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 14.06.1996 மேலே (1) இல் படிக்கப்பட்ட அரசாணைப்படி தனியர் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் வறிய நிலையும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, திரு.மு.மணி என்பவருக்கு திருவாரூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.009811/அ2/2022 நாள்.12.10.2022 இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 14.10.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாக மேல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திரு.மு.மணி என்பவரின் பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில்

இணைந்த 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண்.079047/ஜே/இ2/2023 நாள்.22.07.2024 இல் அனைத்து அசல் சான்றிதழ் மற்றும் கருத்துருவினை இணைத்து அரசுக் கடித எண்.(efile)எண்.4419/தொ.க.(1)/2024-1 நாள்.17.05.2024 இல் தெரிவிக்கப்பட்டவாறு நியமன அலுவலரான முதன்மைக்கல்வி அலுவலர் நிலையில் விதி தளர்வாணைகள் தேவைப்படாத நிலையில் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.மு.மணி இளநிலை உதவியாளர் திருத்துறைப்பூண்டி வட்டாரக்கல்வி அலுவலகம் என்பாரது கருத்துரு ஆய்வு செய்து அதனை ஏற்று தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மு.மணி என்பவரின் பணியினை பணி நியமனத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்ததேதி மற்றும் பணிநியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
| 1 | திரு.மு.மணி<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக்கல்வி அலுவலகம்,<br>திருத்துறைப்பூண்டி | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 14.06.1996<br>27 வயது | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல் |

அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் விதிகளின் படி பெற தகுதியுடையவராகிறார். இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றிதழ்கள் பரிசீலனைக்கப்பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும், பணிவரன்முறை சார்ந்தப் பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள்.

முதன்மைக்கல்வி அலுவலர்(பொ)

திருவாரூர்.

பெறுநர்- வட்டாரக்கல்வி அலுவலர், திருத்துறைப்பூண்டி
(தொடர்புடையவர் கூடுதல் படியுடன்).

நகல் - 1.பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) சென்னை-06, பணிந்தனுப்பப்படுகிறது.

2.மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி/இடைநிலை), திருவாரூர், அனுப்பப்படுகிறது.